## அலகு 3

# விளம்பரத் தமிழ்

- வணிக உலகுக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் இன்றியமையா உதவியை வாரி வழங்கி வருவது விளம்பரத்துறையே ஆகும்.

- விளம்பரம் எங்கெங்கும் பரவியுள்ளது. தொலைக்காட்சி, வானொலி, இதழ்கள் ஆகியவற்றில் அண்மைக் காலமாக விளம்பரங்கள் பெருகிவிட்டன.

- வணிக உலகில் வெற்றிமேல் வெற்றி குவித்து வருவது பெரும் நிறுவனங்கள், தம் வருவாயில்

30 சதவிகிதம் விளம்பரத்துக்காகவே செலவிட அஞ்சுவதில்லை.

## விளம்பர நிறுவனங்கள்

விளம்பரத்துறையில் கோடிக்கணக்கான பணம் புழங்குகிறது. விளம்பரத்தை மிக நுட்பமாகவும் மக்களைக் கவரக் கூடியதாகவும் இருப்பது விளம்பரமே..

## மொழியும் விளம்பரமும்

- எவ்வகை விளம்பரமாக இருக்கட்டும்! விளம்பர உலகின் அடிப்படையான கருவி,”மொழி” ஆகும்.

- வானொலி விளம்பரங்களில்
செவிப்புலனுக்கே வேலை!
காட்சி இன்பமில்லை!
சொற்களுக்கு முதலிடம்!

## தமிழில்

தமிழ்ப் பட்டதாரிகளுக்கு
ஏற்ற துறைகளுள் ஒன்று,
விளம்பரத்துறை.

## விளம்பர வகைகள்

விளம்பர வகைகள் பல
அவற்றில் ஒரு சில

- இதழ்களில் விளம்பரங்கள்
- வானொலி விளம்பரங்கள்
- தொலைக்காட்சி விளம்பரங்கள்
- பலகை விளம்பரங்கள்
- சுவர் விளம்பரங்கள்
- சுவரொட்டி விளம்பரங்கள்

# விளம்பரங்களில் நிறைகளும் குறைகளும்

## சுருக்கமும் தெளிவும்;

விளம்பர வாசகங்கள், வேண்டிய அளவுக்குத் தகவல்கள் தரவேண்டும். நுகர்வோரின் கவனத்தை ஈர்க்க வேண்டும். கற்பனையை விஞ்சும் மிகையான நன்மைகள் பலவற்றை ஆடம்பரமாக வெளியிடும் விளம்பரங்களை மக்கள் ஏற்பதில்லை. மக்கள் கவனத்தைப் பெறுகின்ற வகையில் சுருக்கமாகவும், செறிவாகவும் எழுத வேண்டும்.